


பிரைம் கிராமின்

# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

4 ஆம் தொகுதி - முதலாவது இதழ் - 2015 ஜுன்


தயாரிப்பு : திருமதி. பாத்திமா சாரா

பிரைம் கிராமின் நாவலப்பிட்டி கிளை

படப்பிடிப்பு : லக்ஷ்மன் குமாரதுங்க


HNB "Prime Grameen is a subsidiary of Hatton National Bank PLC"






# அலுவலகத்தில் நீங்கள் இலகுவாக செயல்பட 20 வழிமுறைகள்

உங்களுக்கு சில சந்தர்ப்பங்களில் அதிக வேலைப்பளு காணப்படலாம். இதனால், நீங்கள் அலுவலகத்தில் சில வேலைகளை செய்ய முடியாது, கைவிட வேண்டியேற்படலாம். வேலை செய்ய முடியாமல், கைநழுவிப் போவதை தவிர்ப்பதற்கு நீங்கள் உங்களுடைய வேலை நேரத்தை சரியாக முகாமைத்துவம் செய்யும் போது உங்களுடைய அலுவலக வேலைகள் சிறப்பானதாகவும் திறனுள்ளதாகவும் மாற்றம் பெறும். நீங்கள் அலுவலகத்தில் தொழில் புரியும் போது உங்களுடைய காலநேரம் வீணாக விரயமாக்கப்படுகிறதா? அதனைத் தடுப்பதற்கு எவ்வாறான திட்டங்களை தற்போது பின்பற்றி வருகிறீர்கள்? உங்களுடைய அலுவலக நேரத்தை முறையாக பயன்படுத்த பாரிய திட்டங்கள் பல நாட்கள் செலவழிக்க வேண்டியதில்லை. நாளாந்தம் இதற்காக சில நிமிடங்களை ஒதுக்கினால் போதுமானதாகும்.

உங்களுடைய மேசை, அலுவலக செயற்பாடுகளுக்காக நாளைய தினத்துக்காக வைத்துக் கொள்ள வேண்டாம். இன்றே ஆரம்பியுங்கள். கீழுள்ள முறைகளை கடைப்பிடித்தால் உங்கள் அலுவலகத்தையும் திறனான நிறுவனமாக மாற்றியமைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.

1. உங்களுடைய மேசை பெட்டி, மேசையில் அலுவலகத்துக்கு தேவையான காகிதாதிகளை மாத்திரம் வைத்துக் கொண்டு தேவையற்ற ஏனையவைகளை அப்புறப்படுத்தவும். அவ்விதம் செய்யும் போது காரியாலய உபயோகத்துக்கு தேவையற்ற ஏதேனும் இருப்பின் அவற்றுக்கு அடையாளம் இட்டு அவற்றை தூக்கியெறிய நடவடிக்கை எடுக்கவும். உங்களுக்கு தேவையான உபகரணங்கள், பொருட்கள் சரியான இடத்தில் வைத்துக் கொள்ள திட்டமிடவும். அவ்விதம் செய்யும் போது உபகரணங்களை தேடுவதற்கு செலவிடும் நேரம் தடுக்கப்படும்.

2. நீங்கள் நாளாந்தம் பயன்படுத்தும் பொருட்களை அடையாளம் கண்டு அருவில் வைத்துக் கொள்ளுங்கள். குண்டூசிகள் தேவைப்படும் போது அவற்றை வேறொரு இடத்தில் வைத்துக் கொள்ளவும். தேவையான போது மாத்திரம் அருகில் வைத்துக் கொள்ளவும். உதாரணமாக நாளாந்தம் பயன்படுத்தும் ஸ்டெப்ளர் போன்றவற்றை அருகிலேயே வைத்துக் கொள்ளவும். பஞ்சர் போன்றவை மாதம் ஒருமுறையே பயன்படுத்தப்படும் என்பதால் அவற்றை பொதுவான இடத்தில் வைக்கவும்.

3. காரியாலயத்தில் பயன்படுத்தும் பொருட்களை நீங்கள் அடையாளமிடுங்கள். இதன் மூலம் இலகுவாக அடையாளம் கண்டு கொள்ள முடியும். உதாரணமாக, அலுமாரியில் உள்ள கோப்புகளில் உங்களுக்கு தேவையான கோப்புகளுக்கு இலக்கமிட்டுக் சகலரும் பார்வையிடக்கூடியவாறு வைக்கவும்.

4. உங்கள் அலுமாரியில் முடியுமான வரை கோப்புகளை குறைத்துக் கொண்டு கணணியில் கோப்புகளை சேமிக்க முயற்சி செய்யுங்கள்.

5. மறுநாள் வேலைக்காக முதல் நாள் ஐந்து நிமிட நேரம் ஒதுக்கி (Things to do list) செய்ய வேண்டியவற்றை திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

Things to do list

இவ்விதம் திட்டமிடும் போது உங்கள் செயற்பாடு திறன்மிக்கதாக மாற்றிக் கொள்ள முடியும்.

| | பணி | நேரம் இருந்து வரை | நடை பெற்றது | இல்லை |
|---|---|---|---|---|
| 01 | சிறிய கூட்டம் நடத்தல் | 8.30-8.45 | | |
| 02 | வாடிக்கையாளர்களுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்துக் கொடுத்தல் | 8.45-10.15 | | |
| 03 | | | | |
| 04 | | | | |

6. செய்ய முடியாத வேலைகளை பட்டியல்படுத்தி அதனை உடனடியாக செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கவும்.

7. உங்கள் காரியாலய மேசையின் மேல் தேவையானவற்றை மாத்திரம் வைத்துக் கொண்டு ஏனையவற்றை அப்புறப்படுத்துங்கள். அது உங்களுக்கு உளரீதியாக நன்மை பயக்கும்.

8. உங்கள் கணணியில் உள்ள கோப்புகளை சரியாக பராமரிக்கவும். தேவையற்ற கோப்புகள் காணப்பட்டால் அழிக்க அல்லது வேறு இடத்தில் சேமிக்க வைக்க தகவல் சேமிப்பு அறையொன்றை ஆரம்பிக்கவும்.

9. உங்கள் மேசைப் பெட்டியை அழகாக வைத்துக் கொள்ளவும். தேவையற்ற பொருட்கள் இருப்பின் வீசிவிடவும்.

10. முடியுமான வரை சொந்த கோப்புகளை வைத்துக் கொள்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள். கணணியில் கோப்புகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவும்.

11. நாளாந்தம் வரும் மின்னஞ்சல்களை (E-mail) பார்வையிட இரு தடவைகள் ஒதுக்கிக் கொள்ளவும். காலை மற்றும் மாலையில் அதற்காக நேரத்தை ஒதுக்கிக் கொள்ளவும். முடியுமானவரை அந்த மின்னஞ்சலை (E-mail) பார்வையிட்டு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

12. உங்களுடைய சட்டக் கடிதங்களுக்கு திகதி குறிப்பிட்டு அதற்காக தனியான கோப்பொன்றை தயாரித்து கடிதங்களை திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

13. பழைய கடிதங்களை உடனடியா அகற்றிவிட்டு முறையொன்றை நிறுவனத்துக்குள் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

14. அலுவலகத்தில் பழைய பத்திரிகைகள் காணப்படுமாயின் அவற்றை உடனடியாக அகற்றிவிடுங்கள்.

15. உங்கள் தொழிலை மேம்படுத்தும் மேலதிக அறிவுக்காக கணணியில் தனியான போல்டர் (Folder) ஒன்றை ஆரம்பித்து கல்வியை தொடருங்கள்.

16. நாளின் இறுதியில் நீங்கள் திட்டமிட்ட வேலை செய்து முடிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து பாருங்கள். முடியவில்லையாயின் அடுத்தநாள் அதனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவும்.

17. சகல கடிதம், காகிதாதிகளை வாரத்துக்கொரு முறை கோவைப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்.

18. நாளாந்த காரியாலய செயற்பாடுகளில் மிகவும் முக்கியத்துவமிக்க பணி, முக்கிய பணி, தேவையற்ற வேலை என்ன என்பதை அந்த நாளுக்கு ஏற்றவகையில் முக்கியத்துவமளிக்கவும்.

19. அலுவலக வேலை செய்து கொண்டிருக்கும் போது ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும ஒரு முறை 5 நிமிடம் ஓய்வெடுத்து மனதை ஒருநிலைப்படுத்திக் கொள்ளவும்.

20. நாளின் ஒவ்வொரு நிமிடமும் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கு பழகிக் கொள்ளுங்கள். இதன் மூலம் உங்களுக்கும் காரியாலயத்தில் உள்ள ஏனையவர்களுடன் ஒற்றுமையாகவும், அந்நியொன்யமாகவும் செயற்பட முடியும்.

நீங்கள் இன்றே இந்த 20 முறைகளை வாழ்க்கையில் உள்வாங்கி செயற்பட முயற்சி செய்யவும். அப்போது உங்கள் காரியாலய செயற்பாடுகள் திறன்மிக்கதாக மாற்றமடையும் என்பது எமது கணிப்பாகும்.



கலாநிதி **பிரேமசிறி கமகே**
தலைவர் கைத்தொழில்
அபிவிருத்தி நிலையம்

**மற்றவர்களின் வளர்ச்சியைப் பார்த்து சந்தோஷப்படுவதன் மூலம் தாமும் விருத்தியடைவீர்கள்**



# வாழ்க்கையில் முன்பு இருந்ததை விட ஒரு படி உயர்வாக இருக்க வேண்டுமென்பதே எனது தேவையாக இருந்தது. . . .

## கிராமின் சக்தி

## அவரின் வளர்ச்சி

அஜந்தா குசுமலதா,
அங்கத்தவர், நாவலப்பிட்டி கிளை

"கு "குசுமலதாவின் அம்மா . . . அந்த மகளுக்கு தைத்த ஆடை மிகவும் அழகாக இருக்கிறது ... உடம்புக்கேற்றாற் போல் தைக்கப்பட்டுள்ளது . . .''

"என்ன ஆடை . . . அய்யோ எனக்கு அந்த வேலையை இன்னும் செய்து முடிக்கவில்லை என்பதால் நீ பெரிதாக பேசுகிறாய் போல . . . சற்று பொறுமையாக இரு, நான் விரைவாக அதனை தைத்து முடிக்கிறேன். . . '' அம்மாவினதும், சீலவத்தி மாமியினதும் உரத்த குரலை சிறிய குசுமலதா கேட்டுக் கொண்டிருந்தாள். சீலவத்தி மாமி மகளின் ஆடையை தானே தைத்து கொடுத்தேன் என்று தெரிந்தால் அம்மாவிடம் நன்றாக வாங்கிக் கட்ட வேண்டும். . . மற்றவர்களின் துணியில் வேலை பழக வேண்டாமென்று நான் கூறியிருக்கிறேன் அல்லவா. துணி விரயமானால் அதற்கான பணத்தை யார் கொடுப்பது. . . . குசுமலாத அம்மாவினால் தாக்கப்பட்டமை மீண்டுமொருமுறை ஞாபகத்துக்கு வந்த போது குசுமலதாவின் கைகள் அவளுக்கு தெரியாமலேயே காதுகளுக்கு அருகில் சென்றன. இன்றும் எனது காதுகள் வெடிப்பது போன்றுள்ளது.

அவ்வாறு 13 வயதில் இருந்து அம்மாவுக்கு தெரியாமல் அம்மாவுக்கு கிடைக்கும் துணிகளிலோ அல்லது அம்மாவுக்கு தெரியாமல் பெற்றுக் கொண்ட துணிகளைக் செம்மைப்படுத்தி ஆடைகளை தைப்பதற்கு அஜந்தா குசுமலதா பழகிக் கொண்டார். அதனை நினைத்துப் பார்க்கும் போது அந்த தாயின் வயிற்றில் பிறந்ததை பெருமையாகக் கருதுகிறார். பாடசாலை நாட்களில் தனக்கு தேவைப்படும் நாளாந்த செலவுகளுக்கு குசுமலதா தையல் மூலமான வருமானத்தில் இருந்தே பெற்றுக் கொண்டார். வாழ்க்கையில் இடம்பெறக்கூடிய சவால்களை தைரியமாக முகம் கொடுத்து வெற்றி பெற பழகிக் கொள்ள வேண்டும். ஐந்து ஆறு எழுதப்படித்துக் கொண்ட நாளில் இருந்து ஈடுபட்டு வரும் இந்த தொழில் எனக்கு கிடைத்த போது அதிகளவான வேலைளப்பளு கொண்ட பெண்ணாக மாறியுள்ளேன். குசுமலதாவின் வாழ்க்கை அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டதையே நீங்கள் இவ்விதம் வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

"எனது பிறந்த இடம் களுத்துறை. எனது தகப்பனார் ஒரு விவசாயி. சகோதர சகோதரிகள் பத்து பேர் கொண்ட குடும்பத்தில் நான் எட்டாமவர். நான் களுத்துறை நாகொட பெண்கள் கல்லூரியில் கல்வி கற்றேன். எனது பாடசாலைக் காலத்தில் பொருளாதார ரீதியில் பாரிய பிரச்சினைகள் இருந்தன. இதனால், எனது சகோதரிகளின் உடை, சப்பாத்துக்களையே பாடசாலைக்கு அணிந்து செல்ல வேண்டியிருந்தது. வீட்டுக்கு என்னால் மேலும் துன்பம் ஏற்படக்கூடாது என்பதற்காக சாதாரண தரத்துடன் கல்வியை இடைநிறுத்திக் கொண்டேன். நான் பாடசாலையில் இருந்து விலகினாலும் எனக்கு அப்போது தையல் தொழிலில் நல்ல அனுபவம் இருந்தது. இதற்கு மேலதிகமாக நான் மணமகள் அலங்காரம் தொடர்பிலும் கற்றுக் கொண்டேன். இந்த சந்தர்ப்பத்தில் 1990ஆம் ஆண்டு நான் திருமணம் செய்து கொண்டேன். எனது கணவர் மேசன் தொழிலாளி. எனது மகன் பிறந்த பின்னர் 92-93ஆண்டுகளில் சிறியதாக தையல் மெசின் ஒன்றை வாங்கி தையல் தொழிலை ஆரம்பித்தேன். அப்போது நாங்கள் சிறிய இடமொன்றிலேயே வாழ்ந்து வந்தோம்.

எனக்கு தையல் மெசின் இருக்கவில்லை. எனது கழுத்தில் இருந்த மாலையை அடகு வைத்து சாதாரண சிங்கர் தையல் மெசின் ஒன்றினை வாங்கினேன். அதன் பின்னர் எமது அயலில் உள்ளவர்களிடம் சென்று தையல் ஓடர்களை எடுத்துக் கொண்டு தைத்துக் கொடுத்தேன். அவ்வாறுதான் எனது கைத்தொழிலை ஆரம்பித்தேன். அதன் பின்னர் நாங்கள் இருந்த இடத்தில் இருந்து மாறி தற்போது இருக்கும் வீட்டுக்கு வந்தோம். அப்போது இரண்டு அறைகள் மாத்திரமே இருந்தன. அந்தக் காலப்பகுதியில் எமது வீட்டுக்கு மின்சாரம் இருக்கவில்லை. நான் இரவு இரண்டு மூன்று மணி வரை குப்பி விளக்கை வைத்துக் கொண்டு உடைகளை தைத்து எனது தொழிலை விருத்தி செய்தேன். ஒவ்வொரு நாட்களையும் பயன்மிக்கதாக மாற்றிக் கொள்ள வேண்டுமென நினைத்து செயற்பட்டேன். வாழ்க்கையில் முன்பு இருந்ததை விட ஒரு படி உயர்வாக இருக்க வேண்டுமென்பதே எனது தேவையாக இருந்தது. நான் முதலில் வீட்டுக்கு மின்சாரத்தைப் பெற்றேன். இந்த சந்தர்ப்பத்தில் தான் எனது மூன்றாவது மகள் நரம்புத் தளர்ச்சி நோயினால் பாதிக்கப்பட்டார். படிப்படியாக வளர்ச்சியடைந்த எமது வாழ்க்கை மகள் நோய் வாய்ப்பட்டவுடன் துன்பங் களுக்கு இழக் காக வேண்டி யேற்பட்டது. நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியர்களிடம் பிள்ளை அழைத்துக் கொண்டு சென்றோம். விகாரை, கோவில், பள்ளிவாசல் என அனைத்து இடங்களுக்கும் கூட்டிச் சென்றோம்.

இவ்விதம் மகளின் நோயை வைத்து எமது வாழ்க்கையை விரட்டிக் கொண்டிருந்த வறுமையை போக்க வேண்டுமனால் நான் தொடர்ந்து தையல் தொழிலில் ஈடுபடும் மன தைரியத்தை ஏற்படுத்திக் கொண்டேன். இதற்கு பணம் தேவைப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் தான் பிரைம் கிராமின் நிறுவனத்துடன் இணைந்தேன். அது 2005ஆம் ஆண்டு. வங்கிக்கு சென்று கடன் பெறுவதற்கான எந்தவித தகுதியும் இல்லாமல் இருந்த போது எமக்கு கிராமின் நிறுவனம் கடவுளைப் போன்று கைகொடுத்தது. நான் முதலில் 15,000

10 ஆம் பக்கம்



ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படம் - லக்ஷ்மன் குமாரதுங்க

# பிரைம் கிராமின் கிளையின் செயற்பாடுகள்



சுதத் அசங்க
பிரதேச முகாமையாளர்

எஸ். ரி. ரவி
கிளை முகாமையாளர்

பிரியந்கத குமார
உதவி முகாமையாளர்

நிஷாந்த பிரதீப்
நிதிப் பிரிவு தலைவர்

சமீர வந்த
வெளிக்கள முகாமையாளர்

நளின் அசங்க
வெளிக்கள முகாமையாளர்

# அவர்கள் எம்மீது வைத்துள்ள அசயாத நம்பிக்கை இன்றும் வீணாகாமல் காப்பாற்றப்படுகிறது

## பிரைம் கிராமின் - நாவலப்பிட்டி கிளை

அவிஸ்ஸாவளையைத் தாண்டி கினிகத்ஹேன செல்லும் போது மலைநாட்டின் மண்வாசனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்ற உணர்வு எமது உள்ளத்துக்கு கிடைத்தது. நீல வானத்தை பார்த்த நாங்கள் சுற்றுப்புறமும் செம்மஞ்சள் நிறத்துடனான சிறுதுளி மழை மண்ணில் படும் போது நாம் கினிகத்ஹேனவில் இருந்து நாவலப்பிட்டிக்கு வந்து விட்டோம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் நாவலப்பிட்டி நகரம் அனேகமாக சகல வகையான காலநிலைக்கும் உரித்தான பிரதேசம் என்று அறிமுகப்படுத்த முடியும். மலைநாட்டின் பூகோள தன்மைக்கேற்ப அந்தப் பிரதேசத்தில் தினமும் ஏற்படகூடிய வேறுப்பட்ட காலநிலை மாற்றம் மக்கள் மத்தியில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இவ்வாறான சவால்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் இளைஞர்களைக் கொண்ட பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் நிறுவன பணிகளை வலுப்படுத்தும் நாவலப்பிட்டி கிளையின் செயற்பாடுகள் தொடர்பில் கிளையின் முகாமையாளர் எஸ்.ரி. ரவி அவர்கள் எமக்கு அளித்த நேர்காணலை கீழே தருகின்றோம்.

பிரைம் கிராமின் கிளைகளில் 43ஆவது இடத்தில் நாவலப்பிட்டி கிளை பிரைம் கிராமின் கிளை வலையமைப்பில் 2005.11.20ஆம் திகதி இணைந்து கொண்டது. அன்றிலிருந்து இன்றுவரையான காலப்பகுதி வரை இந்தப் பிரதேச பத்தாயிரம் குடும்பங்களுக்கு மேல் சேவை வழங்கி வருகின்றது.

நாவலப்பிட்டி என்பது சற்று குளிர்மையான காலநிலைக்கு உரிமை கூறும் பிரதேசம் என்பதுடன் பல்வேறு காலநிலை சீர்கேடுகளினால் பாதிப்பிற்குள்ளாகும் பிரதேசமாகும். முகில், பள்ளத்தாக்கு மற்றும் தேயிலைத் தோட்டங்களுடன் கூடிய கரடு முரணான பாதை.... அவ்வாறே அழகான நீர்வீழ்ச்சி ஆகியனவுடன் விசித்திரமான ஸ்ரீபாத மலையை தரிசிக்கும் வாய்ப்பும் எமது உத்தியோகத்தர்களின் நாளாந்த செயற்பாடுகளின் பகுதியாக அமைந்துள்ளன. என்றாலும் இவை அனைத்தும் தமது நாளாந்த செயற்பாடுகளுக்கு எவ்வித தடையுமின்றி தொழிலின் இலக்கை நோக்கி பயணிப்பதற்கான சக்தியை இளைஞர் அணியுடன் இணைந்து செய்வதற்கான களம் அமைந்துள்ளது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

பிரைம் கிராமின் நாவலப்பிட்டி கிளையானது நாவலப்பிட்டி நகரில் 2005ஆம் ஆண்டு இல. 168/18, கொத்மலை வீதி, நாவலப்பிட்டியில் ஸ்தாபிக்கப்பட்டது. அதனையடுத்து 185, கொத்மலை வீதி, நாவலப்பிட்டி என்ற விலாசத்துக்கு கிளை மாற்றப்பட்டது. 2009 ஜனவரி மாதம் 02ஆம் திகதி நாம் இல. 32/2, அம்பகமுவ வீதி, நாவலப்பிட்டி என்ற முகவரியில் தற்போது இயங்கி வருகின்றோம்.

வாடிக்கையாளருக்கு மேலும் சிறப்பான சேவை வகையில் புதிய முகவரியில் புதிய கட்டிடத்தில்எமது கிளை செயற்பட்டு வருகின்றது.

நாவலப்பிட்டி பல்வேறு வர்த்தக செயற்பாடுகளை செய்துவரும் நகரம் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். விசேடமாக மரக்கறி செய்கை, தேயிலை உற்பத்தி, அதனுடன் தொடர்புடைய உற்பத்திகள் இப்பிரதேசத்தில் அதிகளவில் செய்கை பண்ணப்படுகின்றன. அவ்வாறே திஸ்பனையில் மரக்கறி உற்பத்தியிலும் ஒரு சிலர் ஈடுபடுகின்றனர். கித்துகலவில் பாணி மற்றும் கருப்பட்டி உற்பத்தியும் கம்பளையில் பலகை உற்பத்தியிலும் மணல் அகழ்விலும் பிரபல்யம் பெற்றுள்ளன. இதற்கு மேலதிகமாக இந்தப் பிரதேசத்தின் சகல பிரதேசங்களிலும் சாதாரண வியாபாரத்தில் எமது அங்கத்தவர்கள் ஈடுபடுகின்றனர். எமது அங்கத்தவர்கள் பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு அந்த வியாபாரத்தில் ஈடுபடும் அதேவேளையில், புதிய கைத்தொழில்களிலும் ஈடுபடுவதற்கான கடன்வசதிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றோம். இன்று வரை எமது 113 மத்தியநிலையத்தின் 4208 அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் கைத்தொழிலுக்காக 468 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி கிளையின் செயற்பாடானது மத்திய நிலையங்கள் பலவற்றின் ஊடாக முன்னெ டுக்கப்பட்டு வருகின் றது. நாவலப்பிட்டியில் இருந்து ஹட்டன் வீதியின் பொகவந்தலாவ, மஸ்கெலிய வரையும் கம்பளை வீதியின் வட்டப்பல வரையும் கொத்மலை வீதியின் திஸ்பன வரையும் அவிசா வளை வீதியின் நோனகமுவ வரையும்

05 ஆம் பக்கம்

| மத்திய நிலையங்கள் | அங்கத்தவர் எண்ணிக்கை | ஊழியர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் அளவு ரூபா |
|---|---|---|---|
| 113 | 4208 | 18 | ரூ.மி. 468 |



பிரைம் கிராமின் நிறுவனத்தின் நாவலப்பிட்டி கிளை உத்தியோகத்தர்கள்

ஆக்கம் -
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படப்பிடிப்பு
லக்ஷ்மன் குமாரதுங்க

### பிரைம் கிராமின் நாவலப்பிட்டி கிளை உத்தியோகத்தர்கள்

**பிரதேச முகாமையாளர்**
சுதத் அசங்க
**கிளை முகாமையாளர்**
எஸ்.ரி. ரவி
**உதவி முகாமையாளர்**
பிரியந்த குமார் சுபசிங்க
**நிதிப் பிரிவு தலைவர்**
நிஷாந்த பிரதீப் குமார
**வெளிக்கள முகாமையாளர்கள்**
நளின் அசங்க
சமீர வசந்த
**வெளிக்கள நிறைவேற்று**
இந்திக ரொஹான் -
கயான் ரவிந்திர
இந்திக தொரகும்புர
கீத் நதீஷான்
**சேமிப்பு நிறைவேற்று**
சந்தன கீர்த்தி
**கணக்கு உதவியாளர்கள்**
அனுஷ்க தமயந்தி
ரொமேஷ் தில்ருக்ஸ
ரவீந்திர பண்டார
**வெளிக்கள நிறைவேற்று**
சாமர பிரசாத்
சுராங்க பண்டார
சுதத் மனோரஞ்சன்
ரவீரந்திர பண்டார
சமீர பிரியதர்ஷன
சந்தரருவன் ஜயரத்ன
சமீர பிரயதர்ஷன

தோல்வியடைவதற்கான காரணம் சிந்திக்காமல் செயற்படாமையாகும்

04 ஆம் பக்க தொடர்ச்சி

நிறுவன அங்கத்தவத்தர்களுக்கு சிறு கைத்தொழில்களுக்கு கடன் வசதி வழங்கப்படுகின்றன.
பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட சேமிப்புத்திட்டமான யாலு” சிறுவர் சேமிப்பு கணக்கு மியுலெசி பெண்கள் சேமிப்பு கணக்கு மற்றும் பிரைம் சேமிப்பு கணக்கு ஆகிய கணக்குளும் அபிலாஷ, சுவசக்தி, ஈசி லோன் ஆகிய கடன் திட்டங்கள் ஆகியனவும் எமது கிளையில் காணப்படுகின்றன. அங்கத்தவர்களுக்கு நாளாந்தம் ஏற்படும் செலவுகளை ஈடு செய்வதற்கான உடனடியாக வழங்கப்படும் நிவாரணக் கடன் திட்டத்தின் கீழ் எமது மத்திய நிலை யங்கள் 113 நிறுவப்பட்டுள்ளன. இந்த மத்திய நிலையங்கள் ஊடாக எமது அங்கத்தவர் பிள்ளைகளின் கல்வி செயற்பாட்டுக்கு தேவையான பணத்தைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டையும் செய்து வருகின்றோம். இதன் கீழ் கடந்த வருடத்தில் மாத்திரம் 56மில்லியன் ரூபா வரை நிவாரணக் கடன் வழங்கப்பட்டுள்ளது. அங்கத்தவர் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட அங்கத்தவர் மற்றும் கடன் பாதுகாப்பு நிதியத்தின் ஊடாக மரண நிதி மற்றும் இழப்பீட்டு நிதிக்காக கடந்த காலத்தில் 40,000,000ரூபா வழங்கப்பட்டுள்ளது.
கடந்த பதினைந்து வருடங்களாக மக்களுடன் மிகவும் நெருக்கமாக சேவை செய்வதற்கு எம்மால் முடிந்தது. அர்ப்பணிப்பினால் பல்வேறு போட்டி நிறுவனங்கள் காணப்பட்டாலும் அதனைப் பொருட்படுத்தாது எம்மை அடைந்து கொள்ள முடியாதவாறு மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. எம்முடன் இணைந்துள்ள அங்கத்தவர்களில் பலர் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை கட்டியெழுப்பும் வகையில் செயற்படுவதன் காரணமாக தொடர்ந்து கொடுக்கல் வாங்களில் ஈடுபட்டு வருகின்றனர். எமது வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்கும் நிறுவனமாக மாத்திரம் செயற்படுவதில்லை. அவர்களின் கைத்தொழிலை விருத்தி செய்வதற்கு தேவையான ஆலோசனை மற்றும் பயிற்சிகளை ஒழுங்கமைத்துக் கொடுக்கிறோம். நிதி நிறுவனம் என்ற வகையில் பிரைம் கிராமின் நிறுவனத்தின் நோக்கத்தினை அடைவதற்கு தேவையான உதவிகளை தொடர்ந்து பெற்றுக்கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம்.

பிரைம் கிரமின் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டெட்,
இல. 32/2, முதலாம் மாடி,
அம்பகமுவ வீதி, நாவலப்பிட்டி
தொலைபேசி: 0542224131
மின்னஞ்சல்:nawalapitiya@primegrameen.lk

## “எமது வாழ்க்கையை கட்டியெழுப்பும் திட்டத்துக்கு கிராமின் உந்துசக்தியாக இருக்கிறது”



பள்ளேகம அடபாகவை வசிப்பிடமாக கொண்ட இரேஷா குமாரி மற்றும் அதனை அண்டிய இன்னும் பல குடும்பங்களின் வாழ்வாதாரத் தொழிலாக காணப்படுவது பிளாஸ்ரிக் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் சிலைகள், பூச்செண்டு உட்பட பல்வேறு உற்பத்திகளாகும். “மூன்று வருடங்களாக நாம் இந்த பிளாஸ்ரிக் மூலமாக உற்பத்திகளை செய்து வருகிறோம். புத்தர் சிலை, கடவுள் சிலை, பூச்செண்டு, சிறிய சிறிய உற்பத்திகள் செய்யப்படுகின்றன.
பிளாஸ்ரிக் கொழும்பில் இருந்து கொண்டு வந்து உற்பத்தி செய்த பின்னர் அவற்றை பெக்கட்டில் அடைத்து கொழும்புக்கு அனுப்பப்படும்.
எமது பொருட்களை வாங்குவதற்கு சில கடைகள் இருக்கின்றன. இதற்கு மேலதிகமாக பண்டிகைக் காலங்களிலும் பல்வேறு உற்சவங்களிலும் எமது பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சில மொத்த வியாபாரிகளும் எம்மிடமிருந்து நேரடியாக பொருட்களை கொள்வனவு செய்கின்றனர். எவ்வாறாயினும் இந்தத் தொழிலில் எவ்வித நட்டமும் ஏற்படப் போவதில்லை. எவ்வளவு உற்பத்தி செய்கிறோமோ அந்தளவு விற்பனை இருக்கின்றது. எம் போன்ற சிறிய வியாபாரிகளுக்கு வங்கிகளில் கடன் வழங்கப்படுவதில்லை. அந்தக் குறையை கிராமின் நிறுவனம் நிறைவேற்றிமை எமக்கு பாரிய சந்தோஷமாகும். ஏனெனில் பெரிய பெரிய கைத்தொழில்களுக்கு கடன் வழங்குவதற்கு பல நிறுவனங்கள் காணப்படுகின்றன. எனினும் இந்நாட்டில் சிறிய வறுமைமிக்க மக்களுக்கு உதவுபவர்கள் யார்? எமக்கு பெரியளவில் தேவையில்லை. எமது வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டத்துக்கு உந்து சக்தியாக கிராமின் நிறுவனம் இருக்கின்றது”

இரேஷா குமாரி
பள்ளேகம அடபாகே

## கடன் கழுத்துக்கு வரும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல் கைத்தொழிலை விருத்தி செய்ய கிராமின் நிறுவனம் எமக்கு வழிகாட்டுகிறது






கம்பளை பிரதான வீதியில் திரும்பி சிறிய கொங்கிரீட் பாதையின் நேராக சென்று பள்ளம் ஆரம்பிக்கும் அந்தப் பகுதியில் தீபானி வீரசிங்கவின் வீடு காணப்படுகிறது. அந்தப் பள்ளத்தில் இறங்குவது மிகவும் கடினம். அவ்வாறே பள்ளத்தில் இறங்கி மீண்டும் மேலே வருவது அதனை விட கடினம். சரியாக தீபானியின் வாழ்க்கையைப் போன்று. வாழ்க்கையில் உயர்வடைவதற்காக கிராமின் வழங்கிய பங்களிப்பு தீபானி இன்று அதன் அங்கத்தவராவார்.
“.... நான் சுயதொழிலாக தின்பண்டங்களை செய்து வருகின்றேன். மாஸ்மெலோஸ், மஸ்கட், பலகாரம், தொதல் இந்த அனைத்துவகையான தின்பண்டங்களும் நாமே செய்கிறோம். செய்யும் அனைத்துவகையான பண்டங்களும் கம்பளை நகர கடைகளுக்கும் விதாதா நிறுவனத்திலும் விற்பனை செய்யப்படுகின்றன. சுமார் ஒன்றரை வருடங்களாக எமது வாழ்வாதார தொழிலாக இது காணப்படுகிறது. சுய தொழிலுக்கு கிராமின் நிறுவனத்தில் கடன் வழங்கப்படுவதாக ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்ன எனக்கு அறியக்கிடைத்தது. அதன் பின்னர் நான் அங்கத்தவராக இணைந்து கொண்டேன். 25,000 ரூபா கடன் தொகையை பெற்றுக் கொண்ட நான் பின்னர் 50,000, 100,000, 200,000ரூபா வரை கடன் பெற்றுள்ளேன். பெற்றுக் கொள்ளும் கடன் தொகைக்கு நிகராக எமது வியாபாரமும் அபிவிருத்தி அடைய வேண்டும். அவ்வாறில்லையானால் எவ்வாறு இந்த கடன் தொகையை மீளச் செலுத்த முடியும். எமது கைத்தொழிலை நன்றாக ஆராய்ந்த பின்னரே கிராமின் நிறுவனத்தினால் கடன் வழங்கப்படுகிறது. அவ்வாறில்லையானால் நினைத்த மாத்திரத்தில் கடன் வழங்கப்படுமனால் கடனை மீளச் செலுத்த முடியாமல் கஷ்டப்பட வேண்டியது நாங்களே என்று சேர் எங்களுக்கு தெரிவித்துள்ளார். அவ்வாறே கடன் கழுத்துக்கு வரும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல் எமது வியாபாரத்தையும் எமது வாழ்க்கையையும் அபிவிருத்தி செய்ய கிராமின் நிறுவனம் தொடர்ந்தும் எமக்கு வழிகாட்டுகிறது.

சந்திரா ஜயவதி
வெலிகங்க மாவதுர

## அட்டைப் படம்



நாம் அங்கு சென்ற போது சாரா சிறிதாக வெட்டப்பட்ட கடதாசிகளை இயந்திரமொன்றின் ஊடாக சுருட்டிக் கொண்டிருந்தார். காட்போட் ஒன்றினால் இழுக்கக்கூடிய மயிலைப் போன்ற உருண்டையானதும் அழகிய வடிவத்தில் அமைக்கப்பட்ட நீலம், மஞ்சள், பச்சை ஆகிய வர்ணங்களையுடைய கடதாசி உருண்டைகள் மிகவும் நேர்த்தியாக பசையைப் பயன்படுத்தி ஒட்டப்பட்டதைப் பார்க்ககூடியதாக இருந்தது. மயிலின் பின்பக்க தோகை ஒட்டி முடிக்கப்பட்டவுடன் அடுத்ததாக அதன் நகம் மற்றும் தலையும் இரு கால்களும் உருண்டையாக மடிக்கப்பட்ட கடிதாசியில் வடிவமைக்கப்பட்டன. அடுத்த சில விநாடிகளில் தடியொன்றை மறைத்து நிற்கும் மயிலின் அழகிய வடிவமொன்றைக் காண முடிந்தது. சரா தனது கைத்தொழில் படைப்புகளை சிறியளவில் மேற்கொண்டு வருகின்றார்.
“எனக்கு இந்த செயற்பாடுகளுக்கு பாரியளவில் பணத்தை செலவிட முடியவில்லை. கிராமின் நிறுவனத்தின் கடன் திட்டத்தினால் எனது பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. நான் நிர்மாணிக்கும் இந்த படைப்புகளை கெட்டம்பே சிறு கைத்தொழில் அமைச்சினால் விலைக்கு வாங்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக நாம் எமது படைப்புகளை கடைகள் சிலவற்றிலும் விற்பனை செய்யப்படுகின்றன.
வெளிநாட்டவர்களால் இதற்கு நல்ல வரவேற்பு காணப்படுகின்றது. செய்யும் அளவுக்கு கேள்வி உள்ளது. கிராமின் கடன் திட்டத்தினால் எமக்கு எமது வியாபாரத்தை திறம்பட செய்யக் கூடியதாக இருக்கின்றதென புன்முறுவலுடன் தெரிவித்தார்.

பாத்திமா சாரா
கம்பியடி, கம்பளை

## கிராமின் கடன் திட்டத்தில் எவ்வித சிரமமும் இல்லை . . .



நானும் பிளாஸ்ரிக் உற்பத்திகளை நிர்மாணித்து வருகின்றேன். இதனை அவ்வாறு இலகுவாக செய்ய முடியாத கைத்தொழிலாகும். அதற்கு அனுபவமும் வர்ணங்களை சரியாக கலவை செய்யும் திறமையும் காணப்பட வேண்டும். சில காலங்களாக இந்த தொழிலை செய்வதற்கான பணமின்றி விரக்தியில் இருந்தோம். பிளாஸ்ரிக் பெறுவதற்கும், மோல்டிங் செய்ய, வர்ணங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். கிராமின் மத்திய நிலையமொன்று பள்ளேகளைக்கு வந்த பிறகு தான் நாம் எவ்வித பிரச்சினைகளும் இன்றி இந்த சுயதொழிழைல செய்ய கூடியதாக இருந்தது. நான் 20,000 இல் இருந்து 80,000 வரை கடனாக பெற்றேன். அதனை தவணை அடிப்படையில் முறையாக செலுத்தி வந்தேன். கிராமின் நிறுவனத்தின் நான் பார்க்கும் சிறந்த பண்புதான் நிறுவன ஊழியர்களின் அர்ப்பணிப்பு, வேறு நிறுவனங்களில் கடன் பெறுவதற்கு நாள் கணக்கில காத்திருக்க வேண்டும். வரிசைக்கிரமமாக நின்று விண்ணப்பங்களை பூர்த்தி செய்து நாட்டில் காணப்படாத சட்டங்கள் காணப்படுகின்றன. கிராமின் கடன் திட்டத்தில் இந்த எதுவும் இல்லை. மத்திய நிலையங்கள் காணப்படுவது எமது கிராமத்துக்கு அருகில். தேவையானவற்றை அங்குள்ள சேரிடம் பேசி தீர்த்துக் கொள்ள முடியும்.

பீ. அசோதனி, பள்ளேகம அடபாகே




# உங்களுக்கு தெரியாத நான்

## சுதேஷ் பெரேரா
### சிரேஷ்ட முகாமையாளர் தலைமைக்காரியாலயம்



# கிராமினில் நான் 5000ரூபா கடன் எடுத்து டிசேர்ட் வியாபாரமொன்றை ஆரம்பித்தேன்

**முழுப் பெயர் :** வீரக்கொடிகே சுதேஷ் பெரேரா

**பிறந்த திகதி :** 1975.11.06

பாடசாலை: நான் இரண்டு பாடசாலைகளில் கல்வி கற்றேன். கொள்ளுப்பிட்டி மாஷல் பிரே கல்லூரியில் தரம் இரண்டு வரை கற்றேன். அதன் பிறகு கொள்ளுப்பிட்டி புனித மைக்கல் கல்லூரியில் இணைந்து கொண்டேன். எனினும் எனக்கு பிடித்த பாடசாலையாக இரண்டையும் கூற முடியாது. நான் மகாநாம வித்தியாலயத்தில் கல்வி கற்க ஆசைப்பட்டேன். அதற்கு காரணம் உண்டு. நான் கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் உயர் நிலைக்கு வரவேண்டுமென்ற ஆசை இருந்தது. எனினும் நான் சென்ற பாடசாலையில் விளையாட்டுத்துறைக்கு அந்தளவு முக்கியத்துவம் வழங்கப்பட வில்லை. அவ்வாறே, எங்கள் வீட்டுக்கு அருகிலேயே மகாநாம கல்லூரி அமைந்திருந்தது.

**துறை:** சங்கீதம். எனினும் அதனை கற்பதற்கான சூழல் எமது பாடசாலையில் இருக்கவில்லை.

**விளையாட்டு:** கால்பந்து. முதலில் நான் பாடசாலையில் குத்துச் சண்டை விளையாடினேன். எனினும் இரண்டு மூன்று வருடங்களில் குத்துச் சண்டை விளையாட்டில் இருந்து விடுபட்டு கால்பந்து விளையாட்டில் ஆர்வம் காட்டினேன். பாடசாலை விளையாட்டு வீரர் என்ற அடிப்படையில் பல்வேறு விளையாட்டு கழகங்களுக்கு சென்று விளையாடி உள்ளேன். தற்போது கொள்ளுப்பிட்டி யுனைட்டெட் விளையாட்டு கழக கால்பந்து வீரராக நான் செயற்பட்டு வருகின்றேன்.

**பாடசாலையில் கல்வி கற்ற போது விருப்பமான பாடசாலை** என்றாவது ஒரு நாள் நான் விளையாட்டு ஆலோசகராக வரவேண்டுமென்ற கனவு எனக்கு இருந்தது. அந்த எதிர்பார்ப்புக்கு பிரதான காரணம் எனது தந்தை கொழும்பு மாநகர சபை கால்பந்து விளையாட்டு தொடர்பான ஆலோசகராக இருந்தமையாகும்.

**பாடசாலைக் காலத்தில் பெரியவராக வந்தவுடன் எதிர்பார்த்திருந்திருந்தது:** எனது தந்தை. எனது 24 வயதில் தந்தை எங்களை விட்டு பிரிந்தார். எனது விளையாட்டு பயிற்சியாளராக இருந்த எனது தந்தை எம்மை விட்டு பிரிந்தமை பாரிய இழப்பாகும். எனது தந்தை கால்பந்து விளையாட்டுக்கான சிறந்த ஆலோசகராகும். தொழிலில் என்னைவிட நீதியாக செயற்பட்டவர். நான் பயிற்சிக்கு நேரத்துக்கு செல்லவில்லையானால் பயிற்சியில் என்னை சேர்த்துக் கொள்ள மாட்டார். அதற்கு பதிலாக விளையாட்டு மைதானத்தை சுற்றி பல தடவைகள் ஓட வேண்டும். அதுவே தண்டனையாகும். அந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு மாணவன் மாத்திரமே. இவ்விதம் நேர்மையாக செயற்பட்டதனால், சில நயவஞ்சகர்கள் அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் எனது தந்தை பல தடவைகள் தொழிலில் இருந்து நீக்கப்பட்டார். இதனால் எமது குடும்ப வருமானம் பாதிக்கப்பட்டது. எமது கல்வி செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. இது எமது பொருளாதாரத்தில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியது. அவ்வாறே அந்த சோகத்தினால் எனது தந்தை முழுமையாக பலவீனம் அடைந்ததை என்னால் மறக்க முடியாது.

**வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் . .** எனது தந்தை (போர்டிபால பெரேரா)யின் மறைவு. நான் எனது தந்தையுடன் வாழ்க்கையில் பாரிய பயணமொன்றை மேற்கொள்வதற்கு தீர்மானித்திருந்தேன். தொழில் பிரச்சினை காரணமாக தந்தை மனமுடைந்திருந்தார். நோயாளியாகி மன உளைச்சலுக்கு ஆளாகினார். இல்லையென்றால் தந்தை சிறந்த மனிதராக இருந்திருப்பார். என்னையும் தந்தையையும் ஒன்றாக பார்த்தால் இருவரும் ஒரே வடிவத்தை உடையவராக இருப்போம். நான் அந்த சந்தர்ப்பத்தில் ரெஸ்டூரன்டில் வேலை செய்துக் கொண்டிருந்தேன். தந்தைக்கு சுகவீனம் என்று தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அப்போது வைத்தியசாலைகள் அனைத்தும் போராட்டம் காரணமாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. அப்போது சென்றல் வைத்தியசாலையில் வைத்தியர் ஒருவரின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்டு வீடு வரும் போது எனது தந்தை எங்களைவிட்டு மறைந்துவிட்டார்.

**ஆக்கம்**
**மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி**

**முதல் தொழிலை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமங்கள் . . .** தந்தை தொழில் இல்லாமல் இருந்த போது எமது குடும்பம் பொருளாதார ரீதியாக பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்தது. அப்போது நான் படிப்பை நிறுத்திவிட்டு தொழில் செய்ய வேண்டுமென நினைத்தேன். எனது முதல் தொழில் ஷோ வொலஸ் அன்ட் ஹெஜஸ் கம்பனியில் நாட்கூலி அடிப்படையில் தொழிலாளராக இணைந்து கொண்டேன். அதில் களஞ்சியசாலைக்கு வரும் கொள்கலனில் இருந்து பொருட்களை இறக்க வேண்டும். ஒரு நாளைக்கு 75ரூபா சம்பளம். நான் இரவு வரை பணி புரிந்து ஒரு நாளைக்கு 100,150ரூபா வரை பெறுவேன். அங்கு ஆறு மாதம் தொழில் செய்தேன். அதன் பின்னர் எனது அக்காவின் உறவுக்காரர் ஒருவரின் ஹோட்டலில் ஸ்டுவட் தொழில் செய்தேன். அவ்வாறே, ஜெய்க் ஹில்டன் அபார்ட்மென்டில் களஞ்சியசாலை பொறுப்பாளராகவும் தொழில் செய்தேன். எனக்கு அங்கு நல்ல சம்பளம் கிடைத்தது. நான் நன்றாக உடுத்தி சுகபோக வாழ்க்கை வாழ்ந்தேன்.

இரண்டு வருடங்களாக தொழில் செய்த நான், அங்கு ஏற்பட்ட சிறிய பிரச்சினை காரணமாக தொழிலில் இருந்து விலக வேண்டியேற்பட்டது. பிரைம் கிராமின் நிறுவனத்தை நிறுவுவதற்காக அதன் உத்தியோகத்தர்கள் எமது கொள்ளுப்பிட்டி தேவாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள எமது வீட்டு ஒழுங்கைக்கு வந்தனர். அப்போது ஆண்களுக்கும் கடன் வழங்கப்படும். பணம் இல்லாமல் இருந்த நான் எனது நண்பர் பெதேஜுவுடன் ஒரு குழுவை அமைத்துக் கொண்டு வியாபாரமொன்றை ஆரம்பிக்கும் நோக்கில் கடன் கேட்டோம். 5000ரூபா பணத்தைப் பெற்று டி சேர்ட் விற்பனையில் ஈடுபட்டோம். வியாபாரம் நன்றாக நடந்து கொண்டிருந்த போது கிராமின் நிறுவனத்தை ஆரம்பிப்பதற்காக மத்திய நிலையமொன்றை ஆரம்பிக்குமாறு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது எமது மத்திய நிலையம் மிகவும் சிறியது. அதனை நன்றாக வடிவமைத்தோம். எமது செயற்பாடுகளை அவதானித்த நிறுவனம் எங்களை தொழிலில் இணைத்து கொண்டது. அதில் நான் உதவியாளராக பணி புரிந்தேன்.

**வாழ்க்கையில் மிகவும் சந்தோஷமான சம்பவமும் துக்கமான விடயமும் . ..** நான் எனது மனைவியை முதன் முதலாக அவதானித்தமையே எனது வாழ்வில் மகிழ்ச்சிக்குரிய தினமாக கருதுகிறேன். அப்போது நான் ஆறு ஏழு பெண்களை காதலித்து அவர்களுடன் கோபித்துக் கொண்டிருந்த போது கங்காவை பார்த்த போது, நான் இவ்வளவு காலமும் தேடிக்கொண்டிருந்த பெண் இவள்தான் என உணர்ந்து கொண்டேன்.

துக்கமான தினமாக எனது தாயாரின் பிறந்த தினமான 2012ஆண்டு ஏப்ரல் மாதம் 14 திகதியாகும். அவர் தம்பதிவ செல்வதற்கு தயாரான போது என்னிடம் பணம் இன்மையால் அவர் அந்தப்

06 ஆம் பக்கம்

06 ஆம் பக்க தொடர்ச்சி

பயணத்தை நிறுத்திக் கொண்டார். இது மிகவும் கவலைக்குரிய சம்பவமாகும்.

**கடந்த கால வரமொன்று கிடைத்தால் சாதிக்க காத்திருப்பது. . .**

எனது பாடசாலைக்காலம். பல்வேறு காரணங்களால் எனது கல்வியை முறையாக கற்றுக் கொள்ள முடியவில்லை. மீண்டும் அந்தக் காலம் எனக்கு கிடைத்தால் எனது கல்வியை சரியாக கற்றுக்கொள்ள முடியுமென்று நினைக்கிறேன்.

**சரி செய்ய வேண்டுமென நினைக்கும் ஏதேனும் விடயங்கள் இருப்பின்:**

நான் மிகவும் நேர்மையானவன் என்று நினைக்கிறேன். இது தவறில்லை என்றாலும் இந்தச் சமூகத்தில் நேர்மையாக இருக்கும் போது பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால், எனது வாழ்க்கையில் பலவற்றை இழக்க வேண்டியேற்பட்டது.

**உங்கள் வாழ்க்கையின் முன்மாதிரியாக கருதங்கூடியவர்**

எனது தாய். அவரைப் போன்று வலுவான பெண்ணொன்றை நான காணவில்லை. நகர சபையில் எனது தந்தையின் ஓய்வூதியத் தொகை நிறுத்தப்பட்ட போது ஆறு மாதங்களாக பல நபர்களிடம் சென்று விளக்கமளித்து அந்தப் பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளும் வகையில் தனியொரு நபராக செயற்பட்டமை வலுவான பெண் என்பதற்கு சான்றாகும். அவர் தனியொருவர் மாத்திரமின்றி அதிர்ஷ்டசாலியாகும்.

**முதல்காதல் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றம்:**

எனது 22 வயது நான் அந்தப் பெண்ணை பார்த்தேன். அவளுக்கு 17 வயது. தனவந்தகர். எனது பொருளாதார பிரச்சினைகளில் மிகவும் உதவி செய்தவர். எனினும் பொருத்தமின்மையால் எமது காதல் இடைநடுவில் கைவிடப்பட்டது.

**நீங்கள் உங்கள் வாழ்க்கையில் திருப்தியடைகிறீர்களா. . .**

நான் சுதந்திர மற்றும் சாதாரண மனிதராகும். கிடைப்பதைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் பழக்கத்தை கொண்டவன்.

